# Kuruntokai in Contemporary Tamil Studies

**Dr. R. Bhuvitha**
*Assistant Professor, Department of Tamil*
*K.S. Rangasamy College of Arts and Science (Autonomous)*
*Tiruchengode, Namakkal*

**Abstract**
*Studies on literature are being undertaken by various scholars. Depending on the nature of the literary works, the related studies also vary. Research becomes essential to examine the merits and demerits of a work and to bring out its authenticity. Through research, the ability to comprehensively understand a work develops. This article attempts to explore studies related to Kuruntokai and their manifestations.*
***Keywords:*** *Research, Interpretive Methodology, Multidimensional Approach, Comparative Method*

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: அக்டோபர்

வருடம்: 2025

**P-ISSN: 2454-3993**

**E-ISSN: 2582-2810**

**DOI:**
https://doi.org/10.5281/zenodo.17255937

**References**

1. Dr. Achuthan, Ra., Life Principles Depicted in Kuruntokai, Nam Tamilar Publishing House, Chennai, Edition - 2020.
2. Dr. Sarala Rajagopal, Kuruntokai and Thirukkural - A Comparative Study, Oli Publishing House, Chennai, Edition - 2009.
3. Professor Mohan, Ra., Kuruntokai from a Multidimensional Perspective, Vanathi Publishing House, Chennai, Edition - 2017.
4. Varadharasan, Mu., The Wealth of Kuruntokai, Pari Nilayam, Chennai, Edition - 2011.
5. Dr. Raja, Worship and Rituals in Kuruntokai, Ethnic Community and Cultural Traditions in Kuruntokai, www.projectmadurai.org
6. Dr. Kandasamy, So.Na., Critical Analysis of Kuruntokai, Manivacagar Publishing House, Chidambaram, Edition - 2010.
7. Ilampuranar, U.Ve., Tolkappiyam, Poruladhikaram (Subject Matter Section), Sarada Publishing House, Chennai, Edition - 2006.
8. Dr. Tamilannal, Dr. Ilakumanan, M.S., Introduction to Research Methodology, Sellappa Publishing House, Madurai, Edition - 2018.
9. Munaippadiyar, Aranericharram (Compendium of Virtuous Conduct), Sarada Publishing House, Chennai, Edition - 2006.

# சமகாலத் தமிழாய்வுகளில் குறுந்தொகை

***முனைவர் இரா. புவிதா***
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
கே. எஸ். ரங்கசாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி)
திருச்செங்கோடு, நாமக்கல்

***ஆய்வுச் சுருக்கம்***
*இலக்கியங்கள் குறித்த ஆய்வுகள் பல்வேறு அறிஞர்களாலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இலக்கியங்களின் தன்மைகளுக்கேற்ப, அதன் தொடர்பான ஆய்வுகளும் வேறுபடுகின்றன. ஒரு நூலின் நன்மை தீமையினை ஆராய்வதற்கும், உண்மைத் தன்மையினை வெளிக்கொணர்வதற்கும் ஆய்வு அவசியமாகின்றது. ஆய்வின் மூலம் ஒரு நூலினை முழுமையாக அறியும் திறன் உருவாகின்றது. இதில் குறுந்தொகை தொடர்பான ஆய்வுகள் குறித்தும் அதன் வெளிப்பாடும் குறித்தும் இக்கட்டுரை அறிய முயலுகின்றது.*
***திறவுச்சொற்கள்:*** *ஆய்வு, விளக்கமுறை, பன்முக நோக்கு, ஒப்பீட்டு முறை*

### முன்னுரை

பழங்காலந் தொட்டு இன்றைய காலம் வரை தோன்றியுள்ள இலக்கியங்கள் யாவும் ஞுஅந்தந்த காலச் சமுதாயச் சூழலைப் பிரதிபலிப்பவையாக அமைகின்றன. படைப்புகள் யாவும் பன்முகத் தன்மை வாய்ந்தவை. அதனை முழுமையாக அறிந்து கொள்வதற்கு ஒவ்வொரு நூலினையும் திறனாய்ந்து படிப்பது அவசியமாகும். படைப்பாளன் வெளிப்படுத்த எண்ணிய சிந்தனைகளை வாசகர்களால் முழுமையாகப் புரிந்துகொள்ள இயலாத போது திறனாய்வு நூல்கள் உறுதுணையாக அமைகின்றன. இத்திறனாய்வுகள் படைப்பாளனின் நோக்கத்தினை அப்படியே வெளிப் படுத்துவதாக இல்லாமல், நூலினைப் பண்பாட்டு நோக்கிலும் உளவியல் நோக்கிலும் ஒப்பியல் நோக்கிலும் ஆராய்ந்து அதன் வெவ்வேறு தன்மைகளை எடுத்துரைக்கின்றன. அவ்வகையில் குறுந்தொகை தொடர்பான ஆய்வுகள் குறித்து ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

### ஆய்வுகள் - விளக்கம்

ஆய்வு என்பது ஆங்கிலத்தில் “ரிசர்ச்சு’ (Research) எனச்சுட்டப்படுகின்றது. இச்சொல் “ரிசர்ச்சர்” (Researcher) என்ற பிரெஞ்சு மொழிச் சொல்லிலிருந்து உருவானது. ஆய்வு, ஆராய்ச்சி, ஆய்தல் போன்ற சொற்கள் ஒரு பொருள் குறித்தவையாக அமைகின்றன. “சர்ச்’ (Search) என்ற சொல்லுக்கு “தேடுதல்’ எனும் பொருள்படும். அவ்வகையில் “ரிசர்ச்சு’ எனும் சொல் மீண்டும் மீண்டும் தேடுதலைக் குறிக்கின்றது. ஒரு நூலினைப் பல கோணங்களிலும் ஆராய்ந்து முடிவுகளைப் பெறுவதே ஆய்வாக அமைகின்றது.

ஆராய்ச்சி எனும் சொல்லுக்கு பொருள் கூறும் இளம்பூரணர், ஒரு பொருளைக் குறித்து அதன் இயல்பு எத்தன்மைத்தென வாராய்தல் (தொல் பொருள்.மெய்ப்பாட்டியல். நூ.12) என்று கூறுகின்றார். அவ்வகையில் நூலின் தன்மையினை ஆராய்வதாக இலக்கிய ஆய்வுகள் அமைந்துள்ளதனை அறிய முடிகின்றது. ஒரு பொருளினை மென்மேலும் நுணுகி ஆராய்வது ஆய்வு எனப்படுகின்றது. அறிவியல் ஆய்வுகள் அனைத்தும்

செயல்முறை ஆய்வாக அமைகின்றன. இவ்வாய்வில் செய்திகளைத் தாமே நேரடியாகக் கண்டு சேகரித்து ஒப்பிட்டு முடிவுக்காண்பர். இம்முடிபுகள் இதற்கு முன்பு பிறரால் கண்டறியப்படாததாக இருப்பதனால் இவை முதன்மை ஆய்வாகவும் விளங்குகின்றன.

இலக்கிய ஆய்வில் உய்த்துணர் முறையே காணப்படுகின்றது. அதுபோல இலக்கிய ஆய்வுகள் அனைத்தும் செயல்முறை ஆய்வாக இல்லாமல் பகுப்புமுறை ஆய்வாகவும் விளக்கமுறை ஆய்வாகவுமே விளங்குகின்றன. அதாவது இலக்கியத்தில் இருக்கும் செய்திகளை அரசியல், சமுதாயம், காதல், இல்லறம், தனிமனித வாழ்வு, வாழ்வியல் எனப் பகுத்துக் கூறுவதாகவும் நூலின் ஆசிரியர் "இதன் காரணமாக இவ்வாறு கூறுகின்றார், இந்த பாடல் அல்லது பக்கங்களில் இத்தகையச் செய்திகளை எடுத்துரைக்கின்றார்' என விளக்கியுரைப்பதாகவும் அமைந்துள்ளன. இலக்கியத்தின் தரத்தினை ஆராய்வதும் அதன் உண்மைத் தன்மையினைக் கள ஆய்வின் மூலம் மக்களை நேரடியாகச் சந்தித்து மெய்ப்பிக்கும் ஆய்வும் குறைவாகவே உள்ளது.

தமிழில் இன்றைய ஆய்வுகள் பல உள்ளதை விளக்குவனவாகவே அமைகின்றன. ஓரிலக்கியம் என்றால் அதில் எத்தனை உவமைகள் உள்ளன, இயற்கைப்புனைவு எத்தனை அடிகளில் உளது, எத்தனை கருத்துக்கள் பேசப்படுகின்றன, எத்தனை அணிகள் உள்ளன, எத்தனை அடைமொழிகள் உள்ளன என எண்ணுவது புள்ளிவிவரமாகவும் அதை நீட்டி முழக்கி விளக்கியெழுவது ஆய்வாகவும் போய்விட்டன (ஆய்வியல் அறிமுகம்.ப.19) எனத் தமிழண்ணல் கூறுவது குறிப்பிடத்தக்கது.

நூலினை ஆய்பவனுக்கு வேண்டிய தகுதியாக அறிஞர்கள் பலவற்றை எடுத்துரைக்கின்றனர். ஆய்ந்தறியும் திறன், தரவுகளைச் சேகரிக்கும் விடாமுயற்சி, புதுமையினைத் தேடும் சிந்தனை, செய்திகளைப் பகுத்துரைக்கும் முறை, மரபு மாறாமை, ஆய்வு நாகரிகம் போன்றவற்றை அடிப்படையாகக் கொள்ளலாம். இதனோடு ஆய்விற்கு வேண்டிய தகுதியாக நடுநிலைமையினை எடுத்துரைக்கின்றது அறநெறிச்சாரம்.

**காய்தல் உவத்தல் அகற்றி ஒருபொருட்கண்**
**ஆய்தல் அறிவுடையார் கண்ணதே - காய்வதன்கண்**
**உற்றகுணம் தோன்றா தாகும்: உவப்பதன்கண்**
**குற்றமும் தோன்றாக் கெடும்**
***(அறநெறிச்சாரம்.பா.41)***

என்ற பாடலானது, ஆய்வாளன் நூலை ஆய்வதற்குமுன் தன்னுடைய விருப்பு வெறுப்புகளை முதற்கண் அகற்ற வேண்டும் என எடுத்துரைப்பதாக அமைந்துள்ளது. தன்னுடைய சொந்த கருத்துகளுக்கு அப்பாற்பட்டு நூலின் உண்மைத் தன்மையினை ஆய்வதற்கு நடுநிலைமை இன்றியமையாததாகும்.

## குறுந்தொகை ஆய்வுகள்

சங்க கால மக்களின் வாழ்க்கை முறையினையும் மாண்பினையும் எடுத்துரைக்கும் சங்க இலக்கியங்கள் குறித்து பல அறிஞர்களும் பலவாறு ஆய்வு செய்துள்ளனர். அவ்வாய்வுகளில் பல அரசியல், பண்பாடு, பழக்கவழக்கம், போர்முறை, வீரம், அறக்கோட்பாடு, இயற்கை, அகப்புறக் கொள்கைகள், அணிகள், உவமைகள், உள்ளுறை, இறைச்சி, திணை, தெய்வம், சடங்குகள், வழிபாடுகள், தொழில்கள் எனச் சங்க இலக்கியத்தில் உள்ள செய்திகளைப் பகுத்துரைக்கும் ஆய்வாகவே அமைந்துள்ளன. அவ்வாறே குறுந்தொகை ஆய்வுகளும் வெளிவந்துள்ளமை கருதத்தக்கது.

## விளக்கமுறை ஆய்வு

இலக்கியத்தின் ஆழ்ந்த பொருளை அறியவும், கருத்தினை எளிமையாகப்

புரிந்து கொள்ளவும் விளக்கமுறை ஆய்வு பயன்படுகின்றது. இன்றைய காலக்கட்ட ஆய்வேடுகள் பல விளக்கியுரைக்கும் ஆய்வாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இத்தகைய ஆய்வானது பாடல் முழுமையும் வெளிப்படுத்தும் செய்திகளைக் கருத்து களுக்கேற்றவாறு தனித்தனியே தொகுத்தும் பகுத்தும் விளக்குகின்றன. உதாரணமாக, குறுந்தொகை காட்டும் வாழ்வியல் எனும் ஆய்வில், குறுந்தொகைப் பாடல்களில் வாழ்வியல் தொடர்பான செய்திகள் தொகுக்கப்படுகின்றன. இல்லறம், விருந்தோம்பல், அன்பு, சடங்குமுறைகள், பழக்கவழக்கங்கள் குறித்த செய்திகள் சேகரிக்கப்பட்டு, பின்னர் தனியாகத் தலைப்பிடப்பட்டு விளக்கப் படுகின்றன. முனைவர் அச்சுதன் எழுதிய இந்நூலில் ஐந்நிலம் காட்டும் வாழ்வியல், தலைவி காட்டும் வாழ்வியல் நெறி, தோழியின் பாங்கு, மன்னராட்சியும் உவமை சிறப்புகளும் போன்ற தலைப்புகளின் கீழ் குறுந்தொகையில் இடம்பெற்றுள்ள வாழ்வியல் செய்திகள் இடம்பெற்றுள்ளன.

குறுந்தொகையில் வழிபாடுகளும் சடங்குகளும் எனும் நூலானது, குறுந்தொகையில் இடம்பெற்றுள்ள தெய்வங்கள் குறித்த செய்திகள், அவற்றிற்குச் செய்யப்படும் வழிபாடுகள், அதற்கு அடிப்படையாய் விளங்கும் சடங்குகள் பற்றிய செய்திகளை எடுத்துரைக்கின்றன. இந்நூலில் முனைவர் இராஜா அவர்கள், தெய்வங்கள் குறித்த நம்பிக்கை உருவான காரணத்தினையும், பல்வகைப்பட்ட தெய்வங்களின் தன்மையினையும் ஆராய்ந்துள்ளார்.

தொல்குடியினர் இடி, மின்னலோடு கூடிய காற்றின் பயங்கரமான ஆற்றலைப் புரிந்துகொள்ள முடியாமல் ஒரு புதிராக உணர்ந்திருக்கக் கூடும். இதனாலேயே “காத்து-கருப்பு” என்னும் வழக்கம் காற்றுத் தொடர்புடைய தீய ஆவிகளைக் குறிப்பதாக இன்றும் வழக்கத்தில் உள்ளது (குறுந்தொகையில் வழிபாடும் சடங்குகளும், ப.3) எனக் கூறியுள்ளார். இவ்வாறு உள்ள செய்திகளை அவ்வாறே கூறாமல் அதனை நுணுகி ஆராய்ந்து உரைத்தலே ஆய்வாகும்.

மு.வரதராசன் அவர்களின் குறுந்தொகைச் செல்வம், டாக்டர் சோ.ந.கந்தசாமி அவர்களின் குறுந்தொகைத் திறனாய்வு போன்ற நூல்கள் பகுப்புமுறை ஆய்வாக அமைந்துள்ளன. குறுந்தொகைத் திறனாய்வு நூலில், குறுந்தொகையில் உள்ள உள்ளுறை செய்திகள், திணை மயக்கம், வரலாற்றுச் செய்திகள் போன்றவை ஆராயப்பட்டுள்ளன. குறுந்தொகைச் செல்வம் நூலானது குறுந்தொகையினைக் கற்பனைத் திறனோடு உணர்வு அடிப்படையில் செய்யப்பட்ட ஆய்வாக அமைந்துள்ளது.

இவ்வாய்வு நூல்கள் குறுந்தொகைப் பாடல்களின் அகக்கருத்துகளுக்கிடையே பொதிந்துள்ள தமிழரின் வரலாற்று செய்திகளை எளிதில் அறிந்துகொள்ள உறுதுணையாக அமைகின்றன.

### பன்முக நோக்கில் ஆராய்தல்

இலக்கியங்களை ஆய்வுசெய்யும் முதுகலை, முனைவர் பட்ட ஆய்வுகள் பல, பன்முக நோக்கில் ஆராய்வதாக அமைகின்றது. குறிப்பிட்ட களத்தினைத் தேர்வுசெய்து, அதனை நோக்கிய தரவுகளைச் சேகரித்து, ஆராய்ந்து முடிவுகளைப் பெறும் ஆய்வாக இல்லாமல், நூலில் உள்ள பலதரப்பட்ட செய்திகளை ஒருங்கே எடுத்துரைக்கும் ஆய்வாகவே இத்தகைய ஆய்வுகள் அமைகின்றன. பன்முக நோக்கில் நூலினை ஆய்வுசெய்யும்போது புதுப்புது கோட்பாடு களை அடிப்படையாகக் கொண்டு ஆய்வு செய்ய வேண்டும். இருக்கும் செய்திகளை அப்படியே விளக்கியுரைத்தல் கூடாது.

பன்முக நோக்கில் குறுந்தொகை எனும் நூலில் பேராசிரியர் மோகன் அவர்கள், குறுந்தொகையின் பாடல்கள் சிலவற்றை உணர்வு அடிப்படையிலும் உளவியல் நோக்கிலும் நயம் மற்றும் வெளிப்பாட்டினை

நுண்மைத் திறனுடன் ஆராய்ந்துள்ளார். இத்தகைய ஆய்வானது குறுந்தொகையினைப் பாடல், விளக்கமென படிக்கும் பண்புடையோருக்கு, அப்பாடலை உணர்ந்து படிக்கத் தூண்டும் ஆய்வாக அமைந்துள்ளது. இந்நூலில் படுமரத்து மோசிகீரனாரின் குறுந்தொகை பாடலினை உளவியல் நோக்கில் ஆயந்து விளக்கியுள்ளார்.

சீரிய உளவியல் பாங்கும் அரிய வரலாற்றுக் குறிப்பும் ஒருசேரப் பெற்றுப் பொலியும் அழகிய குறுந்தொகைப் பாடல் இது எனலாம் (பன்முக நோக்கில் குறுந்தொகை, ப.117) என இவ்வாய்விற்கு முடிபு கூறுகின்றார்.

### மானுடம் குறித்த ஆய்வுகள்

மனித இனம் தோன்றியது முதல் இன்று வரை பல வகையான வளர்ச்சிகளையும் பழக்கமுறைகளையும் கொண்டுள்ளன. இன்றைய காலத்தில் பழக்கத்தில் உள்ள செயல்பாடுகள் பலவற்றிற்கு சங்ககாலம் தோற்றுவாயாக அமைந்துள்ளது. இதனை அறிந்து கொள்வதோடு, அக்கால மக்கள் தங்களுக்கென அமைத்துக்கொண்ட குழுக்கள் குறித்தும், அதற்கென வகுத்துக்கொண்ட பண்பாட்டுக் கூறுகள் பற்றியும் அறிய வேண்டியது அவசியமாகும். குறுந்தொகையில் உள்ள சமுதாயத்தின் பண்பாட்டு மரபுகளை ஆராய்வதாக, முனைவர் இராஜா அவர்களின் "குறுந்தொகையில் இனக்குழுச் சமுதாயமும் குலக்குறிப் பண்பாட்டு மரபும்' என்ற நூல் அமைந்துள்ளது. இனக்குழுவின் தோற்றம், தலைமை, குலக்குறியீடுகள், பண்பாடு மற்றும் பழக்கவழக்கங்கள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

குலக்குறிகளின் தோற்றம் மற்றும் காரணம் குறித்து, இனக்குழுச் சமுதாயத்தில் மனித இனக்குழுக்கள் ஒவ்வொன்றும் தம்மை ஏதேனும் ஒரு விலங்கு அல்லது தாவரத்துடன் தொடர்புபடுத்திக் கொண்டன. இவ்வாறு தொடர்புடைய உயிரினமே குலக்குறி என வரையறை செய்யப் படுகின்றது (குறுந்தொகையில் இனக்குழுச்சமுதாயமும் குலக்குறிப் பண்பாட்டு மரபும், ப.83) என இந்நூலில் உணர்த்துகின்றார்.

### ஒப்பீட்டு ஆய்வு

இலக்கியப் படைப்புகள் அல்லது படைப்பாளர்களை ஒப்பிட்டு, ஒற்றுமை வேற்றுமைகளை ஆராய்வதே ஒப்பீட்டு ஆய்வாகும். இதனால் இரண்டு படைப்புகளுக்கும் இடையே உள்ள சமூகப் பண்பாட்டுச் செய்திகளையும், அதன் தாக்கங்களையும் அறியமுடியும். ஒரு நூலினை மற்றொரு நூலோடு ஒப்புமைப்படுத்தி ஆய்வு செய்வது மிக எளிய ஆய்வாகக் கருதி செய்யப் படுகின்றது. இத்தகைய ஆய்விற்கு முற்படும் இரண்டு நூல்களையும் முழுமையானப் புரிதல்களை முதலில் பெறுதல் வேண்டும்.

அவை வெளிப்படுத்தும் செய்திகளில் ஒற்றுமை இருந்தால் சான்றுடன் வெளிப்படுத்துவதோடு, வேறுபட்டிருந்தால் காரணப் பின்னணியோடு விளக்குதல் வேண்டும். முனைவர் சரளா இராசகோபாலன் அவர்களின் குறுந்தொகையும் திருக்குறளும் - ஓர் ஒப்பாய்வு எனும் நூல் ஒப்பீட்டு ஆய்வு நூலாக அமைந்துள்ளது. இந்நூலில் குறுந்தொகை மற்றும் திருக்குறளைத் தொடர் ஒப்புமை மற்றும் பொருள் ஒப்புமை நோக்கில் ஆய்வு செய்துள்ளார்.

இருநூல்களுக்கும் இடையேயான ஒருமித்த செய்திகளை எடுத்துரைத்ததோடு மட்டுமில்லாமல், இரண்டு நூல்களும் மாறுபடும் இடங்களையும் சுட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. குறுந்தொகையில் பாணர் தூது வருதல், தலைவி வாயில் மறுத்தல் உள்ளன. திருக்குறளில் இவை இல்லை (குறுந்தொகையும் திருக்குறளும் - ஓர் ஒப்பாய்வு, ப.167) எனக் கூறுகின்றார். இத்தகைய ஒப்பீட்டு ஆய்வானது இருநூலினையும் நுணுகி ஆராய்ந்ததற்குச் சான்றாக அமைவதனை அறிய முடிகின்றது.

**முடிவுரை**

படைப்பாளனின் சிந்தனையும் இலக்கியங்களின் பொருண்மையும் எத்தகைய சிறப்புடையதாக இருந்தாலும், அதனை முழுமையாக உணர்வதற்கும் உணர்த்துவதற்கும் ஆய்வு அவசியமாகின்றது. தமிழிலக்கிய ஆய்வுகள் அனைத்தும் இலக்கியங்களின் உள்கருத்துகளை வெளிப்படுத்துவதாக மட்டுமின்றி, கோட்பாடுகளின் அடிப்படையில் ஆராய்ந்து, இலக்கியத்தின் பன்முகப் பண்பினை எடுத்துரைக்கின்றன. ஒப்பீட்டு ஆய்வானது, ஒரு நூலில் பல்வேறு நூற்கருத்துகளை அறிவதற்கு வழிகாட்டியாய் உள்ளது. அவ்வகையில் குறுந்தொகை தொடர்பான ஆய்வுகள் யாவும் அதன் சிறப்பினையும் ஆழ்ந்துள்ள கருத்துகளையும் அறிவதற்கு உறுதுணையாக அமைந்துள்ளன.

**துணைநூற்பட்டியல்**

1. முனைவர் அச்சுதன், இரா., குறுந்தொகை காட்டும் வாழ்வியல், நாம் தமிழர் பதிப்பகம், சென்னை. பதிப்பு-2020
2. முனைவர் சரளா இராசகோபாலன், குறுந்தொகையும் திருக்குறளும் - ஓர் ஒப்பாய்வு ஒளிப்பதிப்பகம், சென்னை. பதிப்பு- 2009.
3. பேராசிரியர் மோகன், இரா., பன்முக நோக்கில் குறுந்தொகை, வானதி பதிப்பகம், சென்னை. பதிப்பு - 2017
4. வரதராசன், மு., குறுந்தொகைச் செல்வம், பாரி நிலையம், சென்னை. பதிப்பு-2011
5. முனைவர் இராஜா,குறுந்தொகையில் வழிபாடுகளும் சடங்குகளும், குறுந்தொகையில் இனக்குழுச் சமுதாயமும் பண்பாட்டு மரபும், www.notionpress.com
6. டாக்டர் கந்தசாமி, சோ.ந., குறுந்தொகைத் திறனாய்வு, மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம்.பதிப்பு-2010.
7. இளம்பூரணர், உ.ஆ.,தொல்காப்பியம், பொருளதிகாரம், சாரதா பதிப்பகம், சென்னை. பதிப்பு-2006
8. டாக்டர் தமிழண்ணல், டாக்டர் இலக்குமணன், எம்.எஸ்., ஆய்வியல் அறிமுகம், செல்லப்பா பதிப்பகம், மதுரை. பதிப்பு-2018
9. முனைப்பாடியார், அறநெறிச்சாரம், சாரதா பதிப்பகம், சென்னை. பதிப்பு -2006